Koviloor Digital Library

3/2


உ

ஸ்ரீ மந்தார விநாயகர் துணை

வெளியீடு எண் : 1

தோத்திரப்பாமாலை

சிந்தனைக் கவிஞர் சிந. சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில்
பாரோர் படித்துப் பயனுற வழங்
இல்லம் முத்துப்பட்டி



வெளியீடு :

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயம்

கிண்ணிமடம், பேட்டை, சோழவந்தான்-624 214.

1981

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஸ்ரீ மந்தார விநாயகர் துணை

வெளியீடு எண் : 1

3-2

தோத்திரப் பாமாலை



ஸ்ரீ ல ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்


32180

வெளியீடு :

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயம்

கிண்ணிமடம், பேட்டை, சோழவந்தான்.

Koviloor Digital Library



Koviloor Digital Library



ஸ்ரீ அரசஞ்சண்முகனார்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஸ்ரீ மந்தார விநாயகர் துணை

பதிப்புரை.

—o—

1868ல் திரு. அரசப்பபிள்ளை அவர்களுக்கும், திருமதி. பார்வதி அம்மையார் அவர்களுக்கும் மகனாய்த் தோன்றி, இந்நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சிறந்த இலக்கண ஆசிரியராகவும், நாலுரை போதக ஆசிரியராகவும் விளங்கிய சோழவந்தான் ஸ்ரீ அரசஞ்சண்முகனாரின் அனைத்து நூல்களையும் வெளியிடுமுகமாகவும் அதன் முன்னோடியாகவும் இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலின்கண்ணே ஸ்ரீ அரசஞ்சண்முகனார் இயற்றிய சிதம்பரவிநாயகர் மாலை என்னும் 30 பாடல்களும், மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை மீது பாடிய திருவடிப்பத்து பத்துப் பாடல்களும், அன்னாரின் ஆசிரியப் பெருந்தகையாகவும், தமிழ் இலக்கண, இலக்கியம், சித்தாந்த சாத்திரம் மற்றும் சோதிடக்கலையில் சிறந்து விளங்கியவருமான ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் மந்தாரவிநாயக துதிப்பாடல்கள் பதினொன்றும். அவரது குருவாகிய ஸ்ரீ அருளானந்த சுவாமிகள் வாழ்த்தாக 5 பாடல்களும் நன்முறையில் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

சோழவந்தானில் தோன்றிப் பல அரிய நூல்களையும் ஆராய்ச்சித் தொகுதிகளையும் உருவாக்கிய அரசஞ்சண்முகனார் சிறு வயதில் தொடக்க நிலைப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீ அழகர்சாமி தேசிகரிடமும் பின்னர் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளிடமும் சோழவந்தான், பேட்டை கிண்ணிமடத்தில் பயின்று வந்தார். பின்னரே நாடு போற்றும் நற்கவியாக உலகிற்கு அறிமுகமானார்.

எனவே அங்குக் கல்வி பயின்று சோழவந்தானின் பெருமையை உலகறியச் செய்த அரசஞ்சண்முகனாரின் நூல்களை அம்மடாலயத்தின் மூலமாக நான் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

Koviloor Digital Library

அம் முயற்சியின் முதல்படியாக விநாயகர் வணக்கம் இருக்கும் பொருட்டு அரசஞ்சண்முகனாரின் சிதம்பர விநாயகர் துதிப்பாடல்கள் வெளிவருகின்றன. இனி இம் முயற்சியைத் தொடர்ந்து அரசஞ்சண்முகனாரின் மாலைமாற்றுமாலை, நவமணிக் காரிகை நிகண்டு, ஏகபாத நூற்றந்தாதி, தொல்காப்பிய சண்முக விருத்தி, திருக்குறள் சண்முகவிருத்தி. திருக்குறளாராய்ச்சி, இன்னிசை இருநூறு போன்ற நூல்களை வெளியிட முயற்சி செய்து வருகிறேன். இந்நூற்பதிப்பிற்கு ஆதரவாக இருந்து என்னுடைய இம்முயற்சியை ஊக்குவித்த சோழவந்தான் பேரன்பர்களுக்கும் குறிப்பாக உயர்திரு. சா. இராக்கப்ப பிள்ளை அவர்களுக்கும், வித்துவான் உயர்திரு. ந. இராமையாப் பிள்ளை, எம்.ஏ., அவர்களுக்கும் மற்றும் என் இனிய நண்பர்களுக்கும் இதை நன்முறையில் அச்சிட்ட சொர்ணு அச்சகத்தார்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலே சொல்லப்பட்ட அரசஞ்சண்முகனார், சிவப்பிரகாச சுவாமிகள். அருளானந்த சுவாமிகள்ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் அடுத்து வருகின்ற நூல்களில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை அன்பர்கள் பெற்று நற்பயனை அடையும்படியும் என்னுடைய முயற்சிக்கு நல்லாதரவினைத் தரும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு ஸ்ரீ அரசஞ்சண்முகனாரின் திருஉருவச்சிலையை சோழவந்தானில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதையும் மனமகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இறையருள் துணை செய்வதாகுக.

இங்ஙனம் தங்களன்புள்ள,

சோழவந்தான்,
1—3—1981

C. கன்னியப்பன்,
அறங்காவலர்,
ஸ்ரீ ல ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயம்,
பேட்டை, சோழவந்தான் – 624 214.

Koviloor Digital Library

உள்ளுறை

	பக்கம்
ஸ்ரீ மந்தார விநாயகர் பதிகம்	1—4
ஸ்ரீ அருளானந்த சுவாமிகள் மகிமை	5
ஸ்ரீ சிதம்பர விநாயகர் மாலை	6—11
திருவடிப்பத்து வெண்பா	11—12

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

கணபதி துணை

சோழவந்தான்—பேட்டை

ஸ்ரீ மந்தார விநாயகர் பதிகம்

ஸ்ரீ லஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியது

ஏழு சீரடி யாசிரியம்.

அருள்கலந் தடிய ரநர்த்தம்விட் டகன்று
ரன்னையே யாயமர்ந் திடவும்
மருள்கலந் தெளியேன் மங்குபுன் போக
மகிழ்ந்துளேன் மாற்றியாண் டருள்வாய்
தெருள்கலந் தவரைத் தெருட்டுமுள் ளொளியே
தேவதே வர்க்குமோர் தேவே
பொருள்கலந் தவிர்மந் தாரநன் னிழல்வாழ்
புனிதனே மகாகண பதியே. (1)

காமமா தியவாங் கடலில்வீழ்ந் தழுந்துங்
கடையனே னுயினுங் கருணைச்
சேமமார் கரத்தா லெடுத்துநின் மலர்த்தாட்
செழுங்கரை சேர்த்திட நினைவாய்
சோமசூ ரியரோ டங்கிமுச் சுடரே
துலங்குமுக் கண்ணென வுடையாய்
நீமமார் தருமந் தாரநன் னிழல்வாழ்
நித்தனே மகாகண பதியே. (2)

Koviloor Digital Library

சகலகே வலத்திற் கறங்கெனச் சுழலுந்
தடையறக் கடையனேன் றனைப்
புகலரு சுத்த நிலைபுகும் துனது
பொன்னடி நிழல்புணர்த் தருள்வாய்
அகநெகு மன்பே யற்புத வருளே
யருணிசே தனமமர் பொருளே
சுகநிறை வேமந் தாரகன் விழல்வாழ்
சோதியே மகாகண பதியே. (3)

ருமலியி னுழலுஞ் சிந்தையா லகந்தை
நலிமம தைகளொடுங் கூடி
யெமனென வுயிர்கொண் டிகத்திறு மாந்த
வேழையே னெங்ஙன முய்கேன்
கமவுப சாந்த வல்லபை கணவா
கரையிலாக் கருணைமா கடலே
பமரம்வீழ் நறுமந் தாரகன் விழல்வாழ்
பகவனே மகாகண பதியே. (4)

தற்செய லடங்கிச் சருவகா ரணமுந்
தற்பரா நின்செயன் மதிக்குஞ்
சற்சன ருறவே மேவிட மற்றைச்
சழக்கர்பற் றறவரு டருவாய்
அற்பரா லறிதற் கரியமெய்ப் பொருளோ
யப்பனே யொப்புயர்வி லானே
கற்பக நிகர்மந் தாரகன் விழல்வாழ்
கர்த்தனே மகாகண பதியே. (5)

நல்வினை, தீய வினையிரண் டொத்து
நலிமலங் கழன்றுசேட் டையும்விட்

Koviloor Digital Library

டல்லல்செய் மாயை யகன்றுநின் னருளி
லடங்குமா றடக்கியாண் டருள்வாய்
கல்வியின் கரையே கயவருக் கருவே
கருதுவோர்க் கருளிய வுருவே
பில்குதே மலர்மந் தாரநன் னிழல்வாழ்
பிரணவ மகாகண பதியே. (6)

பரசிவ னுன்னைப் பணிந்தபின் வேதப்
பரிரதா ரோகணம் பணிமுப்
புரம்வென்ற தென்றுற் புலையனேன் மறந்து
புரிபிழையெ லாம்பொறுத் தருள்வாய்
கரமொரைந் துடைய கற்பகத் தருவே
கவின்சித்தி புத்திதங் கணவா
வரமுறு விரைமந் தாரநன் னிழல்வாழ்
வல்லவா மகாகண பதியே. (7)

மனமெழா தடக்கி மறைப்பினிற் படாது
வாழறி வதற்கறி வாகி
யினனெளி விரவு விழியொளி புரையு
மெழிலத்து விதநிலை யருள்வாய்
கனமெனக் கருணை மழைபொழி கண்ணு
கவுரிகண் ணுலருந் தமுதே
தினமலர் சொரிமந் தாரநன் னிழல்வாழ்
தெய்வமே மகாகண பதியே (8)

யாவரல் வருக வெவையற லறுக
வெவற்றினும் பயம்விழை வின்றித்
தீவிர தரனு யுனதுமெய்த் தொண்டர்
சேவையிற் செறிந்திட வருள்வாய்

Koviloor Digital Library

சேவலங் துவசன் றுணேவனே பரம
சிவனருட் செல்வனே யாவிக்
காவியே நளிர்மங் தாரகன் விழல்வாழ்
அண்ணலே மகாகண பதியே (9)

வலிய விக்கினஙீ மாய்த்தெனத் தமியேன்
மலபந்த மனத்தையு மாய்த்து
மெலியும் வல்லாளன் மிளிரச்செய் ததுபோல்
விரைந்தெனே மிளிருவித் தருள்வாய்
கலியின்வெம் பகையே கரைபவர்க் குறவே.
கருதுப விளேயுமா கரமே
ஒலியிலே மலிமங் தாரகன் விழல்வாழ்
ஓங்கலே மகாகண பதியே (10)

அகத்தினும் புறத்து மெவற்றினு நிறைந்த
வானந்தப் பிழம்பெனு நின்னே
யிகத்தினி லடியே னெடுத்துரை துதியு
மெழுங்குழ மழலேயாக் கொள்வாய்
மகந்தினு மகத்தே யணுவினு மணுவே
மன்னிய நுண்மைச்செம் பொருளே
தொகத்தரு மலர்மங் தாரகன் விழல்வாழ்
சுகாதிபா மகாகண பதியே. (11)



Koviloor Digital Library

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனுர் குலகுருவாக எழுந்தருளிய கிண்ணிமங்கலம் ஸ்ரீ அருளானந்த சுவாமிகள் மீது ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பாடியது.

அறு சீரடி யாசிரியம்.

1. அருளா னந்த சற்குருவே யன்ன யெங்க ளப்பாவே
அருளா னந்த சற்குருவே யடியார்க் கெளிய வாண்டவனே
அருளா னந்த சற்குருவே யைந்தூ ரவர்கட் கருமருந்தே
அருளா னந்த சற்குருவே யடியே னையுமுவந் தாண்டருளே.

2. கருணை லயமே கற்பகமே களங்க மனத்துக் கயவரையுந்
தெருணை டுணரச் செழிப்பிக்குந் திகழ்மா தவமே செம்பொருளே
மருணை டோறுந் தேய்ந்தறவே மன்னு கடைக்கண் வைத்தருளி
யருணை டோறு மேலிடவே யடியே னையுமுவந் தாண்டருளே.

3. குட்டிச் சுவரைக் கடுவேகக் குதிரை யாக்கிக் கோல்வேந்தன்
எட்டிப் படாத லாற்றுதுஇவுளி யினைக்க இயக்கி யிட்ட
மட்டுப் படாத மாயோகா வரதா யாவும் வல்லோனே
அட்டிப் படாத மெய்ஞ்ஞானி யடியே னையுமுவந் தாண்டருளே.

4. வளஞ்சூழ் கிண்ணி மங்கலத்தின் மாவன் குரந்தோய் வளாக மெலாந்
தளஞ்சூ ழரசன் மானியமாய்த் தந்த புகழுந் தகுதிகொலோ
உளஞ்சூ ழன்பை மிகப்பெருக்கி யுன்றண் மலர்க்க ணெழிந்த வெலாம்
அளஞ்சூழ் பொருளி னுக்குவித்தே யடியே னையுமுவந் தாண்டருளே.

5 சோழவந்தா னூர் துலங்கச் சுற்றமோடுன் பதம் பரவி
வாழவந்தா ரெல்லோரும் வாழ மடா லயமுங் கொண்டாய்
ஊழவந்தா னுடை யேனு முன்சந்நிதி சார்ந் துயங்கினேந்தேன்
ஆழவந்தாள் மலர்ப் பிரசத் தடியே னையுமுவந் தாண்டருளே.

Koviloor Digital Library

உ

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனாரியற்றிய சிதம்பர விநாயகர் மாலை.

வெண்பா

சீரார் சனகைச் சிதம்பரவி நாயகன்மே
லேசார் கவிமாலை யான்பாட—நாரார்
அடியார்கட் கெல்லா மருளுமவ் வையன்
கடியார் மலர்ப்பதமே காப்பு

கொச்சகப்பா

1. அருவா யுருவா யகிலமுமா யெங்குநிறை
பெருவாழ்வே நின்பெருமை பேசுவது மெப்படியோ
குருவா யெனதுமனக் கோயில் குடிகொண்ட
திருவாழ் சனகைச் சிதம்பரவி நாயகனே.

2. ஆறுங்கப் பெண்ணு யலியா யருமறையுங்
காணும வின்றுயைக் காண்பதுவு மெப்படியோ
ஏறூர் வளஞ்சே ரெழிற்சோழ வந்தானிற்
சேறுடர் போற்றுஞ் சிதம்பரவி நாயகனே

3. இந்துமர வும்புனைந்தா யீறிலடி யார்மொழிபோற்
சிந்தை மகிழ்ந்தென் சிறுசொல்லுங் கேட்டருள்வாய்
நிந்தனை யிலாத நெறியோ ருறுஞ்சனகைச்
செந்துவர் மேனிச் சிதம்பரவி நாயகனே

4. ஈத லிசைபெறுத லெக்காலு நின்புகழே
யோதலிவை நாயே னுறப்பணிப்ப தெக்காலம்
காதல் வெறுப்பில்லாக் காட்சியர்கள் வாழ்சனகைச்
சீதமதி சூடுஞ் சிதம்பரவி நாயகனே.

Koviloor Digital Library

5. உடல்பொருளோ டாவி யுவந்தளித்தே னென்றனைக்கை
விடலுனக்கு நானடிமை' விண்ணோர் பெருமானே
மடலார் கமுகை மறைப்பச்செஞ் சாலிவளர்
திடமார் சனகைச் சிதம்பரவி நாயகனே.

6. ஊதையுறு பஞ்சா யுழலு மடியேனைத்
தாதைநீ காவாது தாமதிப்ப தென்னேயோ
வாதையிலா நற்சோழ வந்தான்றெற் குத்தெருவிற்
றீதையிலார் வாழ்த்துஞ் சிதம்பரவி நாயகனே.

7. எண்காலு மெட்டு மிதுவென் றறியாதேன்
கண்காண நின்படிவங் காட்டுநா ளெந்நாளோ
மண்காண விண்காண வந்து சனகைவளர்
திண்கா ரியற்கைச் சிதம்பரவி நாயகனே.

8. ஏவா மலரா லிழுதையென வென்னெஞ்சம்
ஓவா துருகுமின லோட்டுவது மெந்நாளோ
பாவாணர் பாடிப் பரிசு பெறுஞ்சனகைத்
தேவாதி தேவா சிதம்பரவி நாயகனே.

9. ஐயா நிரப்பிடும்பை யாலறிவு குன்றுமற்
செய்யா ளருணோக்கஞ் செய்யவருள் செய்வாய்நீ
மெய்யார் சனகை விமலன் றிருப்புதல்வா
செய்யாத மேனிச் சிதம்பரவி நாயகனே.

10. ஒன்று யிரண்டாகி யொன்றிரண்டா யன்றுநி
நின்றுய்நின் றன்மை நிலைகாண வல்லேனே
பொன்று வருளாற் புரந்தரற்காய்க் காகமெனச்
சென்றுய் சனகைச் சிதம்பரவி நாயகனே.

Koviloor Digital Library

11\. ஓயாப் பிறவி யுவரிக் கரையேறி
வீயாச் சுகவெளியை மேவுவது மெந்நாளோ
தாயாகித் தந்தையாய்ச் சற்குருவாய்ச் சிற்பரையின்
சேயாய்த் திகழுஞ் சிதம்பரவி நாயகனே.

12\. ஔவையார் வெள்ளி யசலத் துறப்புரிந்த
செவ்விய நின்கருணை செப்புந் திறனேயோ
கௌவைநீர் ஞாலத்தின் கண்ணோர் சனகைவளர்
தெவ்வையடு கோட்டுச் சிதம்பரவி நாயகனே.

13\. கள்ள மனத்துக் கடையேனு முன்கருணை
வெள்ளத்துள் மூழ்கியின்ப மேவவருள் செய்வாயோ
வள்ளலே யெல்லாமும் வல்லாயுன் சித்தமதைத்
தெள்ளேன் சனகைச் சிதம்பரவி நாயகனே.

14 அங்கண்மா ஞாலத்தோ டண்டமெல் லாமகட்டிற்
றங்குநீ யென்னுள்ளந் தங்குவது மெப்படியோ
எங்கு மணிக ளிரவொழிக்குந் தென்சனகைச்
செங்கண்மால் போற்றுஞ் சிதம்பரவி நாயகனே.

15\. சனகர் மயக்கந் தவிர்த்துஞா னங்கொளுத்துந்
தினகரவெ னுள்ளத் திமிரமுநீ போக்காயோ
அனகருமை வேளாண்ட வாலவாய் சார்சனகைச்
சினகரத்தில் வாழுஞ் சிதம்பரவி நாயகனே

16 குமலிநா வன்னவடி நாரியர்க ளாசைத்தீ
இமையுமென் சித்தமுரு வின்பருள்க நற்சனகை
அமர்வாயோர் கோட்டா லரும்பா ரதப்போர்பொற்
சிமையத் தெழுதுஞ் சிதம்பரவி நாயகனே.

Koviloor Digital Library

17. இடம்பொருளோ டேவலளித் தின்பங்கிலே கைகூட்டி
மடங்கெடுத்து மெய்ஞ்ஞான வாழ்வுந் தருவாய்நீ
தடம்பொழில்சூழ் வையை தழுவுஞ் சனகைநகர்த்
திடம்பரவு முக்கட் சிதம்பரவி நாயகனே.

18. இணரார்மந் தார மெருக்கறுகு வன்னியிவை
தணவா தணிவாய் தமியனையுங் காத்தருள்வாய்
பிணிமுகமூர் வேற்கைப் பெருமாற்கு முன்றோன்று
திணிதோட் சனகைச் சிதம்பரவி நாயகனே.

19. தந்தா வளந்தான் றனையழைப்பச் சென்றபயந்
தந்தா வளந்தாவத் தாழ்வரைக்கை கொண்டுலகைச்
சிந்தா வளந்தான் றிருமருகா நாயேற்குச்
சிந்தா வளந்தா சிதம்பரவி நாயகனே.

20. நன்மையாய்த் திமையாய் நாளாகிக் கோளாகி
பன்மையுமாய் நின்று யடியேனை யாண்டருள்வாய்
தொன்மையதாய்ச் சீர்படைத்த சோழவந் தானகர்வாழ்
சின்மயனே நூல்வாய்ச் சிதம்பரவி நாயகனே.

21. பகழி மலர் தூற்றியெதிர் பாதகனுக் கஞ்சாமற்
புகழிநெடு நின்பதமே பூசிப்ப தென்நாளோ
அகழியுறு செல்லினத்தை யானையின மென்றடையத்
திகழுஞ் சனகைச் சிதம்பரவி நாயகனே.

22. மற்குறித்த நாற்றோளும் வான்புழைக்கை யொன்றுமுளாய்
எற்குத் துணையா யிருப்பதுன்றன் றண்ணளியே
கொற்கைநேர் சோலை குறிச்சி யெனுஞ்சனகைத்
தெற்குத் தெருவாழ் சிதம்பரவி நாயகனே.

Koviloor Digital Library

23. இயலாதி முத்தமிழு மற்று மெனக்குணர்த்தி
மயலாதி நீக்கியெனை வாழ்விப்ப தெந்நாளோ
கயலார் படுகர்க் கழனிச் சனகையிற்செஞ்
செயலார் பரவுஞ் சிதம்பரவி நாயகனே.

24. அரதனமுங் கல்லுமிணை யாமதித்து நின்பதமே
வரதனமாக் கொண்டு மகிழ்ந்திருப்ப தெந்நாளோ
சரதநல மிக்க சனகையில்வாழ் வாரையெலாந்
திரதனதன் போற்செய் சிதம்பரவி நாயகனே.

25. இலகுமணிப் பூணூர மேந்து மிளநகையார்
கலகவிழி மையல் கடக்குநா ளெந்நாளோ
உலகி லுயர்சனகை யோங்கவள ரோர்கோட்டுத்
திலக வதனச் சிதம்பரவி நாயகனே.

26 வசையிலா வாழ்வும் வழங்கும் பெருவளனும்
அசையா வறிவு மரோகதிட காத்திரமும்
இசையுந் தமிழுமரு ளெந்தாய் சனகையினிற்
றிசையெலாம் போற்றுஞ் சிதம்பரவி நாயகனே.

27. அழலு மதியு மருக்கனுமு வம்பகமாய்த்
தழையுஞ்சி தானந்த சத்தே கருணைமதம்
பொழியும் புகர்முகத்துப் புண்ணியனே காத்தருள்வாய்
செழியன் சனகைச் சிதம்பரவி நாயகனே.

28. இளையார் விழிவாட் கிலக்கா யழியாமல்
விளையும்பே ரானந்த வெள்ளத்துண் மூழ்கவருள்
அளிகொண் மடவார்பா லன்ன நடைகற்றுத்
தெளியுஞ் சனகைச் சிதம்பரவி நாயகனே.

Koviloor Digital Library

29. அறனுர் வருநாளு னம்புயத்தா ளென்னெஞ்சி
லுறநா யகனே யொருவரநீ தந்தருள்வாய்
அறனுடு கூந்த லரிவையரு நூற்புலமைத்
திறனுர் சனகைச் சிதம்பரவி நாயகனே.

30. அனகனே யெண்குணனே யழியாத தத்துவனே
பனக வணியானே பாசாங் குசதரனே
கனக மிகுசனகை காக்கின்ற மெய்ஞ்ஞான
தினகரனே முக்கட் சிதம்பரவி நாயகனே.

மதுரை ஸ்ரீமீனுட்சியம்மை மீது அரசஞ்சண்முகனுர் பாடியது திருவடிப்பத்து வெண்பா.

1. அண்டம்பல் கோடி யகட்டோ ரணுவென்னக்
கொண்டாய்க்கு. நுண்படிவங் கூறினனு—அண்டமொக்கும்
என்ருன் மதுரைக் கிறைவிகொண்டு வாழ்த்தலெங்ஙன்
என்ருலு மேற்ரு ளிணே.

2. ஆலவா யண்ண லருந்திய வாலத்தை
வாலமுத மாக்கியவென் மாதாவின்—காலன்ருே
உள்ளத் திரியா வுழுவனெய் தோய்ந்துநனே
உள்ளத் திரியா ரொளி.

3. இருக்கிசைத்த நூபுரத்தாள் யான்றலைக்கொண் டன்பின்
பெருக்கிலமி ழாதென் பிறந்தேன்—திருக்கழல்சார்
கல்லாய்ப் பிறந்திலேன் காமாரி கூடலிலே
நல்லாய் மணம்புரிந்த ஞான்று.

4. ஈரம் படைத்த விதயமு மெக்காலும்
ஓரம் படையா வொருநாவும்—காரென்ன
ஈகையும் பெற்ரு ரிருக்குந் திருக்கூடற்
ரேகையடி சேர்மின் ரெழுது.

Koviloor Digital Library

5. உலகுண் டுமிழ்கொண்ட லும்பர்பிரான் றங்கை
அலகி லுயிர்க்குயிரா கண்ணல்—வலமுற்ற
தேவிக் கடித்தொண்டு செய்து புகழ்பாடிப்
பாவிக்க கூடற் பதி

6. ஊரார்க் குரைப்பே னுரைத்தபடி யானடவேன்
நீராற் றெதிரேடு நீந்தச்செய்—ஊராளும்
அன்னேயே காத்தா லறத்துக் கிழுக்கென்னை
என்னேயே காத்தா யெனின்.

7. என்று நிலாவு மெரியுமே நோக்காக
என்று நிலாவு மிறைவியுமை—பொன்றாத
கூடற்கு மாரி குயின்றேற்கு மாரியைதா ள்
பாடற்கு மாரியவள் பண்பு.

8. ஏழையான் பட்ட விடும்பைக் கடனீந்த
வாழி கலமாக வாய்த்ததே—பூழியர்கோன்
நற்புத் திரியார் நபமொடுங்குங் காலத்தும்
அற்புத் திரியா ரடி.

9. ஐய மிடாரை யருக்கன் மகனென்று
பொய்யே புகலும் புலவீர்காள்—பொய்யா
மொழிகொண்ட கூடன் மொழிமின் கயல்போல்
விழிகொண்டாள் காலில் விழுந்து.

10. ஒன்றோ பலவோ வுளதோ விலதோவென்
றின்றேபன் னுளு மினெநெஞ்சே—நன்றே
தருக்க வுரைகேட்டுத் தளராதே கூடற்
றிருக்கவுரி நற்றுளே சேர்.

32180

சுபம்.

Koviloor Digital Library

மதுரை மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள் அரசஞ்-சண்முகனுர்மீது இயற்றிய வாழ்த்துக் கவி :

மணிகொண்ட மகுடமுடி வானவர் பணிந்து துதி
மங்கையா மங்க யற்கண்
மாதங்கி கௌமாரி திரிபுராங் தகிதிவ்ய
மரகதாம் பிகை குமாரன்
மந்தரமெ னும்புயப ராக்ர மசுரேசுரன்
வச்சிரவடி வேலா யுதன்
மாதுகுஞ் சரிவள்ளி நாதனெம் மகுத்துளொளிர்
மயில் வேல னருளினுலே
அணிகொண்ட பன்மாட மிகுபாண்டி நகர்கூட
லம்பதி யடுத்து வையை
அருகோங்கு சோலைசூழ் வளமேவு சோழவந்-
தானெனுஞ் சனகை யின்கண்
அரனுபய சரணர விந்தமது மறவாத
அரசப்ப வேள் தவத்தில்
அவதரித் தைந்தாண்டி லேயழகர் சாமியா
லட்சரா ரம்ப மாகித்
திணிகொண்ட பதின்மூன்று வயதினிற் சிலஞ்சேர்
தேவுசிவப் பிரகாசர் பாற்
சீடராய்த் தோன்றியோ ராண்டு நிறைவேறுமுன்
செந்தமிழ்க் கடன் மடுத்துத்
திருக்குறட் சண்முக விருத்தியும் பெருமைசேர்
திருவள்ளு வர்நே ரிசை
செப்புதொல் காப்பியப் பாயிர விருத்தியுஞ்
சித்ரகவி மாலை மாற்றும்
கணிகொண்ட தோர்பஞ்ச தந்திர வெண்பாவொடு
கலம்பகத் துறையி லொருநூல்
கலித்துறையி லோரேக பாதநூற் றந்தாதி
காவியம் பல வியற்றிக்
காசினி மதித்தசோ திடவித்வ பூடணக்
கனயோக பர னுகவுங்
காணுமர சஞ்சண்மு கச்செம்ம லாலெனுங்
கவிவலான் புகழ் வாழியே !

Koviloor Digital Library



விலை ரூ. 0—35 காசு.

சொர்ணு அச்சகம், பேட்டைத் தெரு. சோழவந்தான்.